# இராஜதந்திர தூதரக உத்தியோகபூர்வ இல்லத்தின் ஊழியர் வெற்றிடம்

## வீட்டுப்பணியாளர் / சலவையாளர் [ஆண் / பெண்]

இந்த பதவியை வகிப்பவர் ஊழியர் மற்றும் வீட்டின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் உயர் தொழிற்துறைசார்ந்ததாகவும் உரிய ஒழுங்கமைப்புடனும் சேவைகளை வழங்குவதுடன் விசேடமிக்க தரத்திற்கமைய அனைத்து சாதாரண வீட்டுப் பராமரிப்பு மற்றும் ஆடைகளைச் சலவைச் செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் ஊழியர் அல்லது ஊழியர்களினால் நியமிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் மேற்பார்வையின் கீழ் ஏனைய வீட்டுத் தேவைகளுக்கென தேவையானளவு ஒத்துழைப்புகளை வழங்குதல் வேண்டும்.

**பதவி நிலைக்கான வேலை நேரம் - முழு நேரம் - வாரத்திற்கு 50 மணித்தியாலங்கள்**
**பதவி நிலைக்கான மாதாந்த மொத்த சம்பளம் 361.25 அமெரிக்க டொலர்கள்**

காரியாலய குழுவின் ஊதியம் அமெரிக்க டொலர் நாணய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஊதியம் வழங்கப்படும் காலவரையறையில் காணப்படும் நாணய மாற்று விகிதத்திற்கமைய இலங்கை ரூபாவில் ஊதிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். 2024 ஆகஸ்ட் 20 அளவில் நாணய மாற்று விகிதம் அமெரிக்க டொலர் 1 = ரூபா. 299.40 ஆகும். இது தூதரக காரியாலயத்தின் தற்காலிக மறுசீரமைப்பு என்பதுடன் கட்டாய உரிமையாக கருதப்படமாட்டாது.

**<u>தேவைப்படும் தகுதிகள்:</u>**

- க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியிருத்தல் அல்லது அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருத்தல்.
- இதனை ஒத்த பதவி நிலையில் குறைந்தபட்சம் இரண்டு வருடகால தொழில் அனுபவம். (விருந்தோம்பல் துறையின் அனுபவம் விரும்பத்தக்கது.)
- சிறிய விடயங்கள் தொடர்பிலும் சிறந்த அவதானம் செலுத்துதல், பல்துறைசார்ந்த திறன்கள், பணிகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கென நெகிழ்வுத்தன்மையுடனும் பொருத்தமான முறையிலும் செயற்படுதல்.
- தொழில்சார் பெறுமதிகள், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றுடன் எப்பொழுதும் செயற்படுதல்.
- சலவை தூள்கள், சுத்தப்படுத்தல் உபகரணங்கள் மற்றும் சலவை உபகரணங்களை பயன்படுத்துவதில் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
- செல்லப்பிராணிகளுடன் (நாய்கள், பூனைகள் போன்றவை) அசௌகரியமின்றி செயற்படும் திறன்.
- ஆங்கில மொழி உட்பட சிங்களம் மற்றும் / அல்லது தமிழ் மொழியில் சரளமாக தொடர்பாடும் ஆற்றல்.

**(உத்தியோகபூர்வ இல்லத்தின் காரியாலய குழுக்களில் ஒருவராக கடமையாற்றும் வீட்டுப் பணியாளர்கள் தூதரக காரியாலயத்தின் சேவையாளராக கருதப்படமாட்டார்கள் என்பதுடன், அவர்கள் சேவையாற்றும் வீட்டின் உரிமையாளரின் சேவையாளர்கள் என்பதை கவனத்திற்கொள்ளுங்கள்.)**

இந்த பதவி நிலைக்கு ஆர்வமுள்ள நபர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய தகவல்களுடன் கூடிய உங்கள் சுயவிபரக் கோவையை மின்னஞ்சல் செய்ய வேண்டும்.

1. முழுப்பெயர்
2. தற்போதைய முகவரி மற்றும் தொடர்பு இலக்கம்
3. உங்கள் வயது 18 க்கும் 60க்கும் இடைப்பட்டதா? (ஆம் / இல்லை)
4. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியுள்ளீர்களா? ஆம் எனின், விபரங்கள்.
5. இதனை ஒத்த பதவி நிலையில் குறைந்தபட்சம் இரண்டு வருடகால தொழில் அனுபவம் உள்ளதா? ஆம் எனின், சேவை நிலையத்தின் பெயர், சேவைக் காலம், பணிகள், பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை முன்வையுங்கள்.
6. உங்கள் தற்போதைய / இறுதியாக எடுத்த மாதாந்த மொத்த சம்பளம்?

இதற்கென ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அண்மையில் தயாரிக்கப்பட்ட தமது சுயவிபரக்கோவையுடன் "<u>ColomboERA@state.gov</u>" என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மின்னஞ்சலின் விடயதானத்தில் <u>வீட்டுப்பணியாளர் / சலவையாளர்</u> என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**உங்களின் விண்ணப்பங்கள் 2024 ஒக்டோபர் 13ற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கப்பெறுதல் வேண்டும்.**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் தொடர்புகொள்ளப்படுவார்கள்.